அ.வ.எண். : 171/2010

வா.சா. : 1

பெயர் : கௌரம்மாள்

தேதி : 17.06.2019

(சாட்சி தெலுங்கு மொழி மட்டுமே தெரியுமென்றதால் வழக்கறிஞர் திருமதி. ஸ்ரீதேவி அவர்கள் சாட்சியம் சாட்சியளித்த தெலுங்கு சாட்சியத்தை தமிழ் மொழியில் மொழிபெயர்த்து இரு வழக்கறிஞர்களின் சம்மதத்துடன் கூறினார்.)

**குறுக்கு விசாரணை :** நான் முதல் வாதி. 2-ம் வாதி எனது தங்கை. 1-ம் பிரதிவாதி என்னுடைய சகோதரர். 2-ம் பிரதிவாதி எனது சகோதரரின் மனைவி. 3 முதல் 7 பிரதிவாதிகள் இறந்துபோன சகோதரர்களுடைய வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் எனது தகப்பனார் நரசிம்மரெட்டிக்கு பாத்தியதை என்றால் சரிதான். கிருஷ்ணாரெட்டி, ராமரெட்டி மனைவி கௌரம்மாள், முனிதாயம்மா ஆகிய மூவருக்குள் பாகம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 20.12.1984-ல் மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது பெயரோ, லஷ்மம்மா பெயரோ இல்லையென்றால் சரிதான். அது செய்தது எனக்கு தெரியாது. தாவா சொத்து எந்த சர்வே எண்ணுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நல்லூர் கிராம சர்வே எண்ணில் 1 ஏக்கர் 44 செண்ட். ஜூஜூவாடி கிராமத்தில் 3 ஏக்கர் 42 செண்ட் மற்றும் 39 செண்ட். சர்வே எண்கள் தெரியாது. மேற்படி சங்கதிகளை வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் நான் எனது வாரிசுதாரர்களிடம் சொல்லி அவர்கள் வழக்கறிஞருக்கு சொன்னார்கள். இது சம்மந்தமாக ஆவணம் ஏதும் வழக்கறிஞரிடம் கொடுத்தீர்களா என்றால் இல்லை. பாகப்பிரிவினை பத்திரத்தை பற்றி எனக்கு தெரியாது. அதில் யார் தற்போது சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்றால் பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். சுமார் 40 ஆண்டு காலங்களாக பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். கந்தாயங்களை அவர்கள் தான் கட்டிவருகிறார்கள். பட்டா யார் பெயரில் இருக்கிறது

என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கௌரம்மாள், கிருஷ்ணாரெட்யிடமிருந்து நரசிம்மரெட்டி நிலம் வாங்கியது பற்றி தெரியுமா என்றால் நாங்கள் சிறுவயதிலிருக்கும்போதே எனது தந்தையார் அதனை வாங்கினார். 20.03.1997-ல் அன்று தான் அவர் வாங்கினார் என்றால் இருக்கலாம். வழக்கு சொத்து சம்மந்தமாக எப்போதேனும் அல்லது தற்போதோ வில்லங்க சான்றிதழ் வழக்கு சொத்திற்கு பார்த்ததுண்டா என்றால் இல்லை. 17.03.2014-ல் கிருஷ்ணாரெட்டி, கௌரம்மாள், நாகராஜ்ரெட்டி ஆகியோர்களுக்குள் தாவா சொத்தின் ஒரு பகுதியை குறித்து பரிவர்த்தனை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நான் இருக்குமிடத்திலிருந்து தாவா நிலத்திற்கு 12 கி.மீ. தூரம் இருக்கும். எனது தந்தை இருந்தவரை பசுப்பு குங்குமம், பட்டபாரி, மகசூல் கொடுத்து வந்தார்கள். கிருஷ்ணாரெட்டி மற்றும் ராமரெட்டி ஆகியோர்கள் தனித்தனியாகத்தான் இருந்து வருகிறார்களா என்றால் தனியாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் தனித்தனியே பிரித்து விவசாயம் செய்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது தந்தை இறந்ததிலிருந்து தனித்தனியே இருந்து வருகிறார்கள். 6-வது மாதம் 2009-ம் வருடம் எனது தந்தை இறந்துபோனார். எனது தந்தை அந்த தேதியில் இறந்ததாக எனது பிராதில் சொல்லவில்லையென்றால் சரிதான். தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 40 ஆண்டு காலங்களுக்கு முன்பே பாகப்பிரிவினை செய்யப்பட்டது. அன்றிலிருந்து அவர்கள் தான் தனித்தனியே சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருக்கும் அனைத்து சொத்துக்களையும் இந்த தாவாவில் நான் காண்பிக்கவில்லையென்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி ஆகவேண்டியது என்றால் சரியல்ல. எங்களுக்குள் பஞ்சாயத்து நடந்ததாக சொன்னால் சரியல்ல. அவ்வாறு நடந்திருந்தால் அதைப்பற்றி நான் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.